# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

Tamil

₹ 10/-

India's National Spiritual Newspaper

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

ECHO OF HIS CALL 1969-2019 GOLDEN JUBILEE

REACHING NATIONS

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: Dr. SERENA BEVIN

Vol. XXIX YEAR OF OUR LORD JESUS CHRIST, 2024 DECEMBER No. 12


## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்

### லூக்கா 1:28–35

28. அவள் இருந்த வீட்டில் தேவதூதன் பிரவேசித்து: கிருபை பெற்றவளே, வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார், ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றான்.

29. அவளோ அவனைக் கண்டு, அவன் வார்த்தையினால் கலங்கி, இந்த வாழ்த்துதல் எப்படிப்பட்டதோ என்று சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

30. தேவதூதன் அவளை நோக்கி: மரியாளே, பயப்படாதே; நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய்.

31. இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக.

32. அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார்.

33. அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது என்றான்.

34. அதற்கு மரியாள் தேவதூதனை நோக்கி: இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்றாள்.

35. தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக: பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்.

## கிறிஸ்துவுக்குள் தேவ சமாதானம்!

### கிறிஸ்மஸ்! - உண்மையான உணர்வு!!



*Rev.* ஏஞ்சலின் செல்வகுமாரி, *Hon. Editor-in-Chief*



விடுமுறைக்காலத் துவக்கம் இது; துடிப்பான விழாக்கால அலங்காரங்கள், மினுமினுக்கும் விளக்குகள், மகிழ்ச்சியான கீதபவனிகளால் உலகம் நிறைந்து காணப்படுகின்றது. எனினும் இத்தகைய கொண்டாட்டங்களுக்கு இடையில் சமாதானம், சுகம், நம்பிக்கையை வாஞ்சிக்கும் ஓர் ஆழ்ந்த ஏக்கம் மனித இருதயத்தில் நீடித்திருப்பதை எவரும் மறுக்க இயலாது. பாரம்பரியக் கொண்டாட்டங்களைத் தாண்டி ஒரு மாற்றத்தையளிக்கும் சமாதானத்தின் செய்தியை இயேசு கிறிஸ்து பிறப்பின் கொண்டாட்டங்கள் நமக்கு அறிவிக்கிறது. இயேசு கிறிஸ்துவின் மூலமாக பண்டிகைக்கால மகிழ்ச்சியை மட்டுமல்லாமல், கவலை, பாவம், அவமானம் ஆகியவற்றினால் முடமாகிப்போன உலகில் அவற்றிலிருந்து குணமளிக்கும் ஆழ்ந்த சமாதானத்தையும் பெற்றுக் கொள்கிறோம்.

### இயேசு கிறிஸ்து பிறப்பில் சமாதானச் செய்தி!

சுவிசேஷ நூல்களில் விளக்கப்பட்டுள்ள இயேசு கிறிஸ்து பிறப்பின் பதிவுகளில், மனுக்குலத்திற்கு ஓர் நம்பிக்கை உதயமாகிறது. தேவதூதர்கள் மேய்ப்பரைக் கண்டு, **உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக ...** என்றனர். லூக்கா 2:14. இந்த அறிவிப்பில் இயேசு கிறிஸ்துவின் பிறப்புடன் இணைக்கப்பட்டுள்ள சமாதானமும், சந்தோஷமும், மனுக்குலத்தை தேவனோடு ஒப்புரவாக்கியதில் ஏற்பட்ட விளைவாகும்.

தொடர்ச்சி 3-ம் பக்கம்.....


அழைப்பின் எதிரொலி!



## கிறிஸ்தவ யூடியூப் சானல்!

யோதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களுடன்

நேரடியாக ஜெபிக்க ஓர் நல்வாய்ப்பு!!

5 நிமிடத்தில் தேவ செய்தியும், ஜெபமும்!!

தமிழ், ஆங்கிலம், இந்தி & தெலுங்கு

தினந்தோறும் – காலை 2.00 மணியில் இருந்து

தமிழ் ஞாயிறு ஆராதனை – காலை 8.30 மணிக்கு

* பதிவு செய்யுங்கள் - பிறருக்கும் பகிருங்கள் *

# ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)

REACHING NATIONS



## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...



> தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் கர்த்தர் சமீபமாயிருக்கிறார். – சங்கீதம் 145:18

**OUR MISSION POLICY**

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.


HON. EDITOR-IN-CHIEF
Rev. Angeline S. Kumari, M.A., M.Sc., M.Ed.
HON. MANAGING EDITOR
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.
GENERAL MANAGER
Bro. N. Prakasam, M.A., M.Sc.(C&P), PGDHRM, MBA.
ADMINISTRATION
Sis. Jesy Veena Sam
Adv. K. Puratchivendan, M.Com., C.A., B.L.
Dr. P.E.R. Premchand, M.Sc., M.A., M.Ed., Ph.D.
Dr. C.G.S. Baburao, B.Tech., M.Tech. (DM), Ph.D.
Dr. Rabinder Boaz, M.S. (CMC)
EDITORIAL BOARD
Dr. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Sis. Sajini Cherian
Rev. Dr. K.R. Rajasekaran
Rev. Dr. William Robert, Ph.D., DD, D.Lit.
EDITOR, PUBLISHER & PRINTER



Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 98412 71858
95661 31858
E.MAIL
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in
WEBSITES
www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.com
YOUTUBE CHANNEL
Echo of His Call


கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

எல்லா நாமங்களுக்கும் மேலான நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துவது எங்களது மாபெரும் சிலாக்கியம்.

ஆம், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையினால் நாங்கள் பாதுகாப்பாக இருக்கின்றோம். தேவன் தமது வல்லமையினால் நமது சக ஊழியர்களைத் தொட்டு பலவிதமான சுகவீனங்களிலிருந்தும், மனக்கவலைகளிலிருந்தும் சுகமாக்கினார்.

கடந்த அக்டோபர் மாதம் 19–ம் தேதி கர்த்தரின் கிருபையால் நடைபெற்ற பெண்கள் சிறப்பு முகாமில், நமது **அழைப்பின் எதிரொலியின் Hon. Editor-in-Chief, Rev. ஏஞ்சலின்**



நமது தலைமைச் சபையில் பெண்களுக்கான சிறப்பு முகாம்

**செல்வகுமாரி** அவர்கள் கலந்துகொண்டு செய்தியளித்தது, கலந்துகொண்ட சகோதரிகள் அனைவருக்கும் ஆசீர்வாதமாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தது; அனைவரும் தேவனது தொடுதலையும் தங்களது தனிப்பட்ட வாழ்விலும், குடும்பங்களிலும் பெற்றுக்கொண்டனர்.

அதுபோலவே சென்னையிலிருந்து 60 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள மகாபலிபுரத்திற்கு அருகே, முகாம் மையம் ஒன்றில், ஆண்களுக்கென்று பிரத்தியேகமாக



ஆண்களுக்கான ஒருநாள் சிறப்பு முகாமில் யோசுவா வீரர்கள் *(Joshua Warriors)* – மகாபலிபுரம்

**யோசுவா வீரர்கள் (Joshua Warriors)** என்ற ஒருநாள் சிறப்பு முகாம் நடைபெற்றது. நமது வாகனங்களுடன், பேருந்து ஒன்றையும் வாடகைக்கு அமர்த்தி பயணித்தோம். சிறப்பு பிரசங்கியாளர்களுடன், 70 சகோதரர்கள் கலந்துகொண்டனர்; அத்துடன் ஜெபவேளை, சாட்சிகளை பகிர்ந்து கொள்ளுதல், விளையாட்டு நேரம், மற்றும் அர்ப்பணிப்பு வேளை ஆகிய நிகழ்ச்சிகள் கலந்துகொண்ட அனைவருக்கும் ஆசீர்வாதமாக இருந்தன. பின்மாற்றத்தில் காணப்பட்ட சில சகோதரர்கள் கண்ணீருடன் முன்வந்து தங்களை அர்ப்பணித்தனர். விளைவாக அவர்கள் இனிமேல் தொடர்ந்து சபை ஆராதனையில் பங்குபெற்று, ஊழியத்திலும்


Our Ministries: ECHO OF HIS CALL Monthly Magazines (16 languages) ✿ BIBLECOR - Postal Courses (3 languages) ✿ YouTube Ministry ✿ Online Courses ✿ Theological Correspondence Courses (2 languages) ✿ Church Planting ✿ Nehemiah Bible Colleges ✿ Gospel Printing Press ✿ Great Commission Partners ✿ St. Paul's Matriculation School ✿ Crusades ✿ Community Development

ஈடுபடுவர். கலந்துகொண்ட அனைவருக்கும் சிற்றுண்டி, மதியம் உணவு, தேநீர், தின்பண்டங்கள் மற்றும் டி–சர்ட் வழங்கப்பட்டது. இவர்களுக்காக தயவுசெய்து ஜெபிக்கவும்.

டிசம்பர் மாதம் கிறிஸ்து பிறப்பின் நாட்களை முன்னிட்டு நற்செய்தி நிகழ்ச்சிகள் மற்றும் சபை நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்வதில் மிகவும் அலுவலாக உள்ளோம். பரிசுப் பொருட்கள், உணவு, ஆடைகள் ஆகியவற்றை அன்பளிப்பாக வழங்கி கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள் மூலம் இரட்சிப்படையாத சமூகத்தினரை அடைவதற்கு சரியான தருணம் இதுதான். நமது உடன் ஊழியர்கள் அனைவரின் உடல் ஆரோக்கியத்திற்காக ஜெபித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

2024– ஆம் ஆண்டு முழுவதும் தங்களது ஜெபத்தினாலும், உதவியினாலும் தாங்கின எமது சகோதர சகோதரிகள் அனைவருக்கும் மிகுந்த நன்றியுள்ளவர்களாயிருக்கின்றோம். மிகவும் இக்கட்டான வேளைகளில், நாங்கள் தைரியமாயிருக்கத்தக்கதாக, தேவன் எங்களுடன் பயணித்தார் என்று நாங்கள் சாட்சி பகர முடியும். அவரது கோலும், தடியும் எங்களைத் தேற்றின, **உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்.** சங்கீதம் 23:4. புதிய ஆண்டு 2025 தேவ பிள்ளைகளுக்கு பெருத்த ஆசீர்வாதமாக அமையும் என்று நம்புவோமாக. எல்லையற்ற அன்புடன் உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் ஜெபித்து வருகிறோம். **கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக் கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்கப் பண்ணி, உன்மேல் கிருபையாயிருக்கக் கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரசன்னமாக்கி, உனக்குச் சமாதானம் கட்டளையிடக்கடவர் என்பதே.** எண்ணாகமம் 6:24–26.

அனைவருக்கும் இனிய மகிழ்ச்சியான **கிறிஸ்துமஸ்** மற்றும் **ஆசீர்வாதமான புத்தாண்டு வாழ்த்துக்கள்!**

கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியர்கள்,

**போதகர் அலக்ஸ் சாம்சன் சாம்**
**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்.**

(+91) 98410 71858 / 98412 71858,
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org

## உங்கள் கவனத்திற்கு!

*நமது அழைப்பின் எதிரொலி ஊழியத்தின் 5 நிமிட தேவ செய்திகளும், ஜெபங்களும் தினமும் காலை 2.00 மணி முதல் தமிழ், தெலுங்கு, இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் Echo of His Call YouTube சானலில் ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கின்றன. இதைப் பார்ப்பதன் மூலம் கர்த்தரின் கிருபையைப் பெறலாம்.*

*மேலும், (+91) 98410 71858 மற்றும் (+91) 98412 71858 ஆகிய என்னுடைய தனிப்பட்ட (Personal) இரு செல்போன் எண்களையும் தங்கள் செல்போன்களில் பதிவு செய்து கொள்ளுங்கள்.*

– போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்

... 1–ம் பக்கத் தொடர்ச்சி

ஏசாயாவின் தீர்க்கதரிசனம் இச்செய்தியை அழகாகக் கூறுகிறது. **நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்.** ஏசாயா 9:6. பாவத்தினாலும், சாபத்தினாலும் கெட்டுப் போன உலகிற்கு, சமாதானத்தை அளிக்கும் இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தை சமாதானப் பிரபு என்னும் நாமம் உள்ளடக்கியுள்ளது.

### நங்கூரமாகிய தேவ சமாதானம்!

வாழ்க்கையின் குழப்பமான சமயங்களில் தேவ சமாதானம் நமது ஆத்தும நங்கூரமாயுள்ளது. **நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய விண்ணப்பத்தினாலும், ஜெபத்தினாலும் தேவனுக்கு தெரியப் படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்.** பிலிப்பியர் 4:6–7 என்று பவுல் அப்போஸ்தலர் கூறியுள்ளாரே.

**... இவர்களெல்லாரும், ஸ்தீரிகளோடும் இயேசுவின் தாயாகிய மரியாளோடும், அவருடைய சகோதரரோடுங்கூட ஒருமனப்பட்டு, ஜெபத்திலும், வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள். அப்போஸ்தலர் 1:14**

**தமிழக தென்மாவட்டங்களில் வாழும் மக்களுடன் இணைந்து ஜெபிக்க விரும்புகின்றோம்!**

**உலக சமாதானத்திற்காகவும், தேவமக்களின் விடுதலைக்காகவும் ஜெபம்!**



**இடம் : அழைப்பின் எதிரொலி உலக சமாதான மையம்**
**ஆழ்வார்கோயில் சந்திப்பு – வட்டம் ரோடு,**
**தக்கலை – இரணியல் பிரதான சாலை, நெய்யூர் அஞ்சல்,**
**கன்னியாகுமரி மாவட்டம் –629 802**

**காலம்: 13.12.2024**
**2ஆம் வெள்ளிக்கிழமை**
**காலை 10 மணி முதல்**
**மதியம் 12 மணி வரை**

**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்கள் தனது உடன் ஊழியர்களுடன் கலந்து கொள்வார்கள்.**

கன்னியாகுமரி மாவட்டத்தில் பிறந்து அங்கேயே தேவஅழைப்பைப் பெற்று, போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்கள், சென்னையில் கடந்த 55 ஆண்டுகளாக நமது தலைமைச் சபை மூலமாக பன்னோக்கு ஊழியங்களை கர்த்தருக்காக செய்து வருகிறார்.

கர்த்தரின் வெளிப்பாட்டின்படி, கர்த்தருக்கு சித்தமானால், இந்த கூட்டம் அவர் மூலம் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறவிருக்கிறது. வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்கப்படும்! கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அற்புதங்களை செய்வார்!!

தேவனால் நடத்தப்படும் தேவபிள்ளைகள் இதில் கலந்து கொள்ளலாம். தொலைதூரத்தில் இருக்கும் தேவபிள்ளைகளும் அதே நேரத்தில் தங்களுடைய இடங்களில் இருந்து கொண்டே எங்களுடன் கர்த்தரிடம் பாரத்துடன் ஜெபிக்கலாம்.

**நிர்வாகக்குழு : அழைப்பின் எதிரொலி ஊழியங்கள், Cell: 98412 71858**

மறுரூபமாக்கவல்ல இந்த சமாதானம், வாழ்க்கைப் புயலின் மத்தியில் நமக்குச் சமாதானத்தையும் அமைதியையும் அருளுகிறது. தேவனுடைய நீங்காப் பிரசன்னத்தையும், கரிசனையையும் அவரோடு நமக்களிக்கும் ஒரு ஐக்கியத்தைப் பெற்றிட இயேசு கிறிஸ்துவின் மூலம் நாம் அழைக்கப்படுகிறோம்; அது பண்டிகைக் காலமோ அல்லது நமக்கு பாதகமான காலங்களோ, நாம் தனிமையில் இல்லை என்பதை நினைவூட்ட அவரது சமாதானம் நம்மைச் சூழ்ந்து கொள்ளுகிறது.

## பாவத்திலும், வெட்கத்திலிருந்தும் விடுதலை!

இயேசு கிறிஸ்து பிறப்பின் மிக முக்கியமான செய்திகளில் ஒன்றுதான், பாவத்திலும், அவமானத்திலுமிருந்து அவர் மூலமாய் அளிக்கப்படும் விடுதலையாகும். பாவத்தினாலும், குற்றவுணர்வினாலும் மனுக்குலத்திற்கு ஏற்பட்ட விளைவு தகுதியின்மையும், அவமானமுமாகும். “தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை” மேசியாவின் வருகை வெறுமனே ஒரு அற்புதமான நிகழ்வல்ல, அது தேவனுக்கும், மனிதனுக்கும் இடையேயான உடன்படிக்கையின் துவக்கமாகும். நம்முடைய பாவங்களிலிருந்த நம்மை இரட்சிக்க இயேசு வானவர் வந்தார். **அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் ...** மத்தேயு 1:21.

இச்செய்தியைத்தான், **கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை.** (ரோமர் 8:1) பவுல் இரக்க உணர்வுடன் திரும்பக் கூறியுள்ளார். இது நம்பிக்கையும், அவமானத்தையும் சிலுவையில் சுமந்த இயேசு, பாவமன்னிப்பை மட்டுமல்ல, தேவனுக்குப் பிரியமான பிள்ளைகள் என்ற புதிய அடையாளத்தையும் நமக்களித்துள்ளார்.

## மன்னிப்பின் வல்லமை!

இயேசு கிறிஸ்துவின் மூலம் நாம் பெற்றுக் கொள்ளும் தேவ சமாதானம் பாவமன்னிப்புடன் உறுதியாகப் பிணைக்கப் பட்டுள்ளது; அது பாவம், அவமானத்தின் கட்டுக்களை அறுத்து, நாம் பெற்றுள்ள புதிய சுயாதீனத்தில் நம்மை நடக்கச் செய்கிறது. இதனைப் பவுல் பின்வருமாறு எழுதியுள்ளார்; **இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தின வருமாயிருக்கிற, பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம். அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவ மன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது.** கொலோசெயர் 1:13–14. இந்த சத்தியத்தை நாம் அறிந்து கொள்வது கடந்த காலப் பாவத்தின் பாரத்தை நம்மிடமிருந்து நீக்கி இக்காலத்தில் பூரணமாய் வாழ விடுதலையளிக்கிறது. கிறிஸ்துமஸ் அந்த விடுதலையின் கொண்டாட்டமாகவே உள்ளது!

தொடர்ச்சி 6–ம் பக்கம்.....


## அவசரத் தேவை

**அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்** அமோக வளர்ச்சியடைந்து வருவதால் ஊழிய தரிசனமும், பிரதிஷ்டையும், உண்மையும் உள்ள கீழ்க்காணும் பொறுப்புகளை ஏற்க ஆண், பெண் ஊழியர்கள் தேவை.

* **தலைமை சபை முழுநேர உதவி ஊழியர்கள்**
* **சென்னையில் உள்ள கிளை சபைகளுக்கு முழுநேரப் போதகர்கள்**
* **முழுநேர செக்யூரிட்டிப் பணியாளர்கள்**
* **DTP மற்றும் தட்டச்சு தெரிந்தவர்கள்**
* **ஆங்கிலம் மற்றும் இதர மொழிகளில் பேச அல்லது எழுத தேர்ச்சி பெற்றவர்கள்**
* **நிர்வாகத்தில் ஆர்வமுள்ள அலுவலக மேலாளர்கள்**
* **முழுநேர வேதாகமக் கல்லூரி விரிவுரையாளர்கள்**
* **ஊழிய வளர்ச்சிப் பணியாளர்கள்**
* **முழுநேர வாகன ஓட்டுநர்கள்**
* **மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கான ஆசிரியர்கள் மற்றும் முதல்வர்கள்**
* **அழைப்பின் எதிரொலி பத்திரிகை ஆசிரியர் குழுவில் செயல்பட தன்னார்வ உறுதுணையாளர்கள்** (Hon.Co-ordinators)
* **முழுநேர சமையல் பெண்கள்**
* **முழு நேர துப்புரவு பணியாளர்கள்**

**தகுதிக்கேற்ப மாத சம்பளம் வழங்கப்படும்.**

**அழைப்பின் எதிரொலி** அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.
விண்ணப்பிக்க வேண்டிய வாட்ஸ்அப் எண் : 98412 71858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org



## நெகேமியா வேதாகமக் கல்லூரிகள்

சேப்பாக்கம் & சந்தோஷபுரம், வேளச்சேரி – சென்னை

**கல்வித்தகுதி : 10–ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்**

ECHO OF HIS CALL 1966-2016 REACHING NATIONS

**Diploma in Theology**

போதனா மொழி : தமிழ் (பகுதி நேரம்) மாலை நேர வகுப்பு
போதனா மொழி : இந்தி (முழு நேரம் (Residential)) (தங்கிப் படிப்பவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.)

உடனே அணுகவும் !

**உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 55 வருட அனுபவ ஸ்தாபனம்.**

தொடர்புக்கு : தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, பெல்ஸ் ரோடு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

GREAT COMMISSION PARTNERS
ECHO OF HIS CALL MINISTRIES SINCE 1969

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் - 2024 டிசம்பர் 19 முதல் 2025 ஜனவரி 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

- **டிசம்பர் 19** ⇨ நமது அனைத்து இணை ஆசிரியர்களையும், அவர்களின் குடும்ப அங்கத்தினர்களையும் ஆசீர்வதித்து வருகிறதற்காக...
- **டிசம்பர் 20** ⇨ நமது **சுவிசேஷத்தின் அச்சகத்தின்** தங்குதடையற்ற இயக்கத்திற்காகவும் அதற்கு காரணமாயிருக்கும் திறமையான ஊழியர்களுக்காகவும்...
- **டிசம்பர் 21** ⇨ நமது தலைமைப் போதகர் அவர்களையும், அவரது குடும்பத்தினரையும் எல்லாவித தீயசக்திகளிலிருந்தும் விலக்கிக் காத்துக் கொண்டதற்காக...
- **டிசம்பர் 22** ⇨ நமது மிஷனரி ஊழியர்களின் பெரிதான அர்ப்பணிப்பிற்காக ...
- **டிசம்பர் 23** ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் அனைவரையும், அவர்களது குடும்பத்தாரையும் ஆசீர்வதித்து வருகிறதற்காக ...
- **டிசம்பர் 24** ⇨ நமது பணியாளர்கள் அனைவரது குடும்பத்தினர் மீதும் கர்த்தருடைய ஆசீர்வாதம் பொழியப் பட்டதற்காக...
- **டிசம்பர் 25** ⇨ உலக இரட்சகராகிய இயேசு கிறிஸ்து அனைத்து ஜீவன்களையும் இரட்சிப்பதற்காக இப்பூவுலகில் பிறந்ததற்காக...
- **டிசம்பர் 26** ⇨ இவ்வருட அனைத்து கிறிஸ்மஸ் நிகழ்வுகளை ஆசீர்வதித்த கிருபைக்காக ...
- **டிசம்பர் 27** ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, நெகேமியா வேதாகமக்கல்லூரி** மற்றும் **அஞ்சல்வழி வேதாகமக்கல்வி** மூலமாக மாணவர்கள் பயனடைந்து கொண்டிருப்பதற்காக...
- **டிசம்பர் 28** ⇨ நமது **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களில் 2024, 2025–ல் நடைபெற்ற மற்றும் நடைபெறவிருக்கும் விசேஷித்த கூட்டங்கள் மற்றும் கருத்தரங்குகளை ஆசீர்வதித்த கிருபைக்காக ...
- **டிசம்பர் 29** ⇨ இந்த வருடம் முழுவதும் தேவ ஊழியர்களுக்கு கொடுத்த விசேஷித்த பாதுகாப்பிற்காக...
- **டிசம்பர் 30** ⇨ இவ்வருடம் முழுவதும் அனைத்து கிறிஸ்தவ நிறுவனங்கள் சுமூகமாக நடைபெற்றமைக்காக...
- **டிசம்பர் 31** ⇨ 2024ம் வருடத்திற்கான அனைத்து தேவைகளையும் அற்புதமாக தேவன் சந்தித்த கிருபைக்காக..
- **ஜனவரி 01** ⇨ உலகில் உள்ள நமது வாசகர்கள் மற்றும் மக்கள் 2024–ம் ஆண்டு முழுவதும் சமாதானத்துடன் இருந்ததற்காகவும், 2025–ம் வருடத்திற்குள் அடியெடுத்து வைப்பதற்காகவும்...
- **ஜனவரி 02** ⇨ இப்புது வருடப்பிறப்பில் அனைத்து சபைகளுக்கும், சபையினர்களுக்கும் கொடுத்த நல்வாக்குத் தத்தங்களுக்காக...
- **ஜனவரி 03** ⇨ 2025ம் வருடத்தில் அனைத்து கிறிஸ்தவ அமைப்புகளையும், தேவாலயங்களையும் ஆசீர்வதித்து வரும் கிருபைக்காக...

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

- **ஜனவரி 04** ⇨ உலக மக்களின் தனிமனித வருமானம் உயர்வதற்காக...
- **ஜனவரி 05** ⇨ உலக மக்களுக்கு புதுப்புது வியாதிகள் பரவாமல், அனைவரும் முழு ஆரோக்கியத்துடன் திகழ...
- **ஜனவரி 06** ⇨ உலகத்திலுள்ள கிறிஸ்தவ சபைகளுக்கு விரோதமான தீயசக்திகளிடமிருந்து விசேஷித்த பாதுகாப்பு கிடைப்பதற்காக ...
- **ஜனவரி 07** ⇨ உலகத் தலைவர்கள் அனைவரும் மக்களின் நலனை சிந்தித்து கர்த்தர் அருளிய ஞானத்துடன் செயல்பட ...
- **ஜனவரி 08** ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, நெகேமியா வேதாகமக்கல்லூரி** மற்றும் **அஞ்சல்வழி வேதாகமக்கல்வியின் முதல்வர்கள்**, ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பணியாளர்களுக்காக...
- **ஜனவரி 09** ⇨ 2025–ம் வருடத்திலும் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் மீது நன்மைக்கேதுவான கர்த்தரின் கரம் இருப்பதற்காக...
- **ஜனவரி 10** ⇨ உலக நாடுகளிடையே சமாதானம் நிலவி பொருளாதார மேம்பாடு அடைவதற்காக...
- **ஜனவரி 11** ⇨ அனைத்து குடும்பங்களிலும் சமாதானம் நிலவ...
- **ஜனவரி 12** ⇨ இந்த மாதத்தின் தேவைகள் அனைத்தும் கர்த்தரால் சந்திக்கப்பட...
- **ஜனவரி 13** ⇨ நமது தலைமைப் போதகரது சுயசரிதை எழுதும் செயல்பாடு வெற்றிகரமாக நிறைவடைந்திட...
- **ஜனவரி 14** ⇨ நமது ஊழிய விரிவாக்கம் மற்றும் உலகளாவிய சுவிசேஷ பிரபல்யத்திற்காகவும்...
- **ஜனவரி 15** ⇨ இளைஞர்கள் மத்தியில் கிரியை செய்யும் வன்முறை மற்றும் கொலைவெறி ஆவிகள் நீக்கப்பட்டு பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட...
- **ஜனவரி 16** ⇨ கிறிஸ்தவர்கள் கர்த்தரின் வேத வசனத்தை பின்பற்றி, கிறிஸ்துவின் சாயலை அடைவதற்காக...
- **ஜனவரி 17** ⇨ அலுவலகத்திற்கு தகுதியான புதிய பணியாளர்கள் நியமிக்கப்பட...
- **ஜனவரி 18** ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் அனைவரையும், அவர்களது குடும்பத்தாரையும் கர்த்தர் ஆசீர்வதிக்க ...

... 4-ம் பக்கத் தொடர்ச்சி

## உடைந்துள்ள உலகில் நம்பிக்கை!

பண்டிகைக்காலக் கொண்டாட்டங்கள் மற்றும் மகிழ்ச்சியான கூடுகைகளெல்லாம் ஒருபுறமிருக்க, மறுபக்கத்தில் உடைந்த உள்ளத்தோடும், வேதனையோடும் பலர் அமைதியாய்ப் போராடிக் கொண்டுதானுள்ளனர். வாழ்க்கையின் பிரச்சனைகளாகிய தொய்ந்த உறவுகள், வன்முறையில் பாதிக்கப்பட்ட சமுதாயம், இழப்பின் துக்க துயரங்கள் நமது சந்தோஷத்தை மறைத்து விடலாம். இது போன்ற உலகில், இயேசு கிறிஸ்துவின் பிறப்பு நமக்கு நம்பிக்கையின் ஒளியை வீசச் செய்கிறது.

இயேசு கிறிஸ்துவின் பிறப்பு மனுக்குலத்தின்பால் தேவன் கொண்டுள்ள மாறாத அர்ப்பணிப்பைச் சித்தரிக்கிறது. உலகத்தின் வெளிச்சமாக, ... **நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்** ... யோவான் 8:12 என்று இயேசு கிறிஸ்து கூறினார். வாழ்வின் நம்பிக்கையற்ற நிலையிலும், இந்த ஒளி நமக்கு நம்பிக்கையைக் கொண்டு வருகிறது.

கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தில் நங்கூரம் போல உள்ள நமது நம்பிக்கை இக்காலத்திற்கும், வருங்காலத்திற்கும் ஏற்றதாயிருக்கிறது என்று பவுல் நமக்கு நினைப்பூட்டியுள்ளார். **பரிசுத்த ஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு, நம்பிக்கையின் தேவன் ... எல்லாவித சந்தோஷத்தினாலும் ... உங்களை நிரப்புவாராக.** ரோமன் 15:13. இயேசு கிறிஸ்து பிறப்பின் நம்பிக்கையை தியானிக்கும் நாம், அதனைத் துயரப்படும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள அழைக்கப்பட்டிருக்கிறோம்.

## நம்பிக்கையற்றோருக்கு நம்பிக்கை!

இயேசு கிறிஸ்து பிறப்பின் செய்தி நம்பிக்கையின்மையால் பாரமுற்றோருக்கு நம்பிக்கையளிக்கிறது. வாழ்க்கையின் பாரங்களால் நம்பிக்கையிழந்தோர் பலர். இந்த நம்பிக்கையைத் தான் தீர்க்கன் எரேமியா பின்வருமாறு நமக்கு நினைவூட்டியுள்ளார். **நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன்." என்று கர்த்தர் சொல்லுகிறார். அவைகள் தீமைக்கல்ல சமாதானத்துக்கேதுவான நினைவுகளே.** எரேமியா 29:11.

இயேசு கிறிஸ்துவே அந்த நம்பிக்கை. நமது சூழ்நிலைகளும், தகுதியுமல்ல, இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையும், போதனைகளுமே நமக்கு ஆறுதலையும், நோக்கத்தையும் அளிக்கிறது. நம்பிக்கைக்கு ஏங்கும் ஓர் உலகில், இயேசு கிறிஸ்து பிறப்பின் செய்தி வாழ நம்பிக்கையற்ற இருளான நேரங்களிலும் நமக்கு விசுவாசத்தையும், நம்பிக்கையுமளிக்கிறது.

## ஒரு சமாதானமற்ற உலகில் சமாதானப் பிரபுவாகிய இயேசு கிறிஸ்து!

எதிர்ப்பு, ஏழ்மை, அநீதி, பிரிவினை போன்ற எண்ணற்ற சவால்களை நமது உலகம் சந்திக்கிறது; இவைகளைத் சந்திக்கவே கிறிஸ்து இயேசு வெளிப்பட்டார் என்று இயேசு கிறிஸ்து பிறப்பை கொண்டாடும் நாம் நினைவுகூரவேண்டும். அவர் சமாதானத்தைச் சுமக்கிறவரல்ல; அவரே சமாதானகாரணராகி, **சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்.** மத்தேயு 5:9. இயேசு கிறிஸ்துவானவர் தனது வாழ்நாள் நெடுகவே ஒடுக்கப்பட்டவர்களைச் சந்திப்பதிலும், விரோதிகளை ஒப்புரவாக்குவதிலும், இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்குவதிலும் சமாதானம் பண்ணி முன்மாதிரியாக திகழ்ந்தார். அவரது அடிச்சுவடுகள் நமது சமுதாயங்களிலும், உறவுகளிலும் சமாதானத்தைத் தொடர நம்மை ஊக்கப்படுத்துகிறது.

## சபையின் பங்கு!

கலக்கத்திலுள்ள உலகிற்குச் சமாதானத்தையளிப்பதில் திருச்சபை முக்கியப் பங்கு வகிக்கிறது. இயேசு கிறிஸ்துவின் சரீரமாகக் காணப்படும் நாம் உண்மையான வழியில் அன்பையும், கிருபையையும் வெளிப்படுத்த அழைக்கப்பட்டுள்ளோம். ஆகையால், **அவரே சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச் சுவரைத் தகர்த்தார்** (எபேசியர் 2:14–16). என்று பவுல் அப்போஸ்தலர் எழுதியுள்ளார்.

இயேசு கிறிஸ்துவின் மூலமாய் தடைகள் தகர்க்கப்பட்டு, ஒருமைப்பாடு உறுதிப்பட்டுள்ளதென மேற்குறிப்பிட்ட வேதபகுதி கூறுகிறது. பிரிவினைகள் காணப்படும் உலகில் சபையானது நம்பிக்கையளிக்கும் ஒளியாகக் காணப்பட்டு, மன்னிப்பையும், ஒப்புரவாக்குதலையும் மாதிரியாகக் காண்பிக்க வேண்டும்.

இயேசு கிறிஸ்து அருளும் சமாதானத்திற்கு நமது கிரியைகள் ஒரு வலிமையான கருவியாகக் காணப்பட வேண்டும்.

## பயம், கவலை, மன அழுத்தத்திலிருந்து மனித இதயத்தை குணமாக்குதல்!

விடுமுறைக்காலம் என்றாலே பயமும், கவலையும், மனஅழுத்தமும்

தொடர்ச்சி 8-ம் பக்கம்.....

---

உலக சபைகளிலும், சமுதாயங்களிலும் எழுப்புதல் ஏற்பட

## ஒருநாள் உபவாச ஜெபம்!



**14.12.2024 இரண்டாவது சனிக்கிழமை**
**காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை**

**இந்திய தேவசபை அழைப்பின் எதிரொலி வளாகம்,**
10, முகம்மது அப்துல்லா இரண்டாவது தெரு,
பெல்ஸ் ரோடு, சேப்பாக்கம், சென்னை 600 005

**சிறப்பு அழைப்பாளர்கள்**

**விசுவாச ஜெபத்தில் அனுபவம் உள்ள தேவ ஊழியர்கள்**

உங்களையும் அன்புடன் அழைக்கிறோம்.

வெளி ஊர்களில் மற்றும் இதர தேசங்களில் இருக்கிறவர்கள் நீங்கள் இருக்கிற இடங்களில் இருந்தே, அதே நேரத்தில் எங்களுடன் கலந்து கொள்ளலாம். நிகழ்ச்சிகள் யூடியூபில் நேரலையில் தொடர்ந்து வெளியிடப்படும்.

எல்லா சபைகளுக்காகவும் ஜெபிப்போம்! எல்லா சமுதாய மக்களுக்காகவும், எல்லா தேசங்களுக்காகவும் ஜெபிப்போம்!!

போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்

## நமது தலைமையக ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்!

1. ஜெப உதவி – 24 மணி நேரம்
2. அழைப்பின் எதிரொலி – பத்திரிகைகள் (16 மொழிகள்)
   தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், மராத்தி, பெங்காளி, குஜராத்தி, ஒடியா, நேப்பாளி, அஸாமி, பஞ்சாபி, உருது, சிங்களம், ஆப்ரிகான்ஸ்.
3. வேதாகமக் கடித முறைக் கல்வி – தமிழ், ஆங்கிலம், இந்தி
4. அஞ்சல் வழி இறையியல் கல்வி (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
5. நெகேமியா வேதாகமக் கல்லூரிகள் – (சேப்பாக்கம், வேளச்சேரி & சந்தோஷபுரம்)
6. பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் (ஊழியர் ஐக்கியம்)
7. பயிற்சி வகுப்புகள் – கருத்தரங்குகள்
8. சுவிசேஷக் கூட்டங்கள்
9. கைப்பிரதி வினியோகம் – தொடர் ஊழியம்
10. சுவிசேஷ அச்சகம் – சுவிசேஷ பிரசுரங்கள்
11. St. பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி – கிராம ஆங்கிலப் பள்ளி
12. சிறுவர் வேத பாடசாலை (சேப்பாக்கம்) – ஞாயிறு காலை 10.30 மணி
    & (வேளச்சேரி, பாலாஜி நகர் & சந்தோஷபுரம்) மாலை 3.00 மணி
13. அதிகாலை ஆராதனை – ஞாயிறு காலை 5.30 மணி
14. ஆயத்தக் கூட்டம் – ஞாயிறு காலை 8.00 மணி
15. தமிழ் ஆரதனைகள் – ஞாயிறு காலை 8.30 மணி
16. வாலிபர் கூட்டம் – ஞாயிறு காலை 11.00 மணி
17. ஐக்கிய உணவு – ஞாயிறு மதியம் 1.00 மணி
18. இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 4.00 மணி
19. தெலுங்கு ஆராதனை – ஞாயிறு மாலை 5.00 மணி
20. ஆங்கிலம் – இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 6.00 மணி
21. கருத்து நேரம் – ஞாயிறு இரவு 7.00 மணி
22. பெண்கள் ஆராதனை – புதன் மாலை 5.30 மணி
23. ஆண்கள் ஆராதனை – வெள்ளி இரவு 7.00 மணி
24. சீஷத்துவக் கூட்டம் – சனி மாலை 6.00 மணி
25. வீட்டுக் கூட்டங்கள் – செவ்வாய், வியாழன் மாலை 6.30 மணி
26. விசேஷ திருவிருந்து – பிரதி மாதம் முதல் நாள் காலை 6.00 மணி
27. ஊழியர்கள் கூடுகை – முதல் சனிக்கிழமை மாலை 6.00 மணி
28. பெற்றோர் ஜெபம் – முதல் ஞாயிறு மாலை 4.00 மணி
29. இரவு ஜெபம் – 3–ம் வெள்ளி இரவு 9.30 மணி
30. உபவாச ஜெபம் – இரண்டாம் சனிக்கிழமை காலை 9.30 மணி
31. திருவிருந்து – 2–ம் ஞாயிறு ஆராதனைகள்
32. வாலிபர் / சிறுவருக்கான ஜெபம் – தினமும் இரவு 10.00 மணி (தொலைபேசி மூலம்)
33. பணியாளர் ஜெபம் – தினமும் காலை 9.00 மணி
34. அலுவலகம் – தினமும் காலை 9.00 முதல் இரவு 9.00 வரை (ஞாயிறு தவிர)

## அழைப்பின் எதிரொலி தபால் வழிக் கல்வி

### இந்திய மாணாக்கர்களுக்கு

### I. வேதாகமத் தபால் கல்வி

தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.



"புதுவாழ்வு – உமக்கு" என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.

– ஆசிரியர்

### II. அஞ்சல் வழி இறையியல் கல்வி




ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம்

**ரூ.1000/– மட்டுமே.**

மேலும் விவரங்களுக்கு :



**தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி**
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.
தொலைபேசி: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766
கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்அஞ்சல்: biblecor@yahoo.co.in

## அழைப்பின்எதிரொலி பத்திரிகையை

### இலவசமாய்ப் பெற்றிட ஓர் நல்ல வாய்ப்பு

உங்கள் / உறவினர் / நண்பர்கள் முகவரி மற்றும் கைபேசி எண்ணை தபால் / கடிதம் / வாட்ஸ் அப் மூலமாக தெளிவாக **அழைப்பின் எதிரொலி** அலுவலகத்திற்கோ, அலுவலக செல்போனுக்கோ அனுப்பினால் உங்களுக்கு / உறவினர்களுக்கு / நண்பர்களுக்கு இலவசமாக **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை அனுப்பி வைக்கப்படும். தேவனுக்கான இச்சேவை முற்றிலும் இலவசமானது! தேவனின் அருளை பெற வாரீர்!!



# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)



## வெற்றிக்கு ஏணியாக இருந்தத் தோல்விகள்!

**அழைப்பின் எதிரொலி** ஊழிய ஆரம்பக்காலத்திலிருந்தே தனி ஜெபம், கூட்டு ஜெபம், உபவாச ஜெபம் மற்றும் முழு இரவு ஜெபங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வந்தோம். பண பெலத்தினாலோ அல்லது ஆள் பெலத்தினாலோ இந்த ஊழிய ஸ்தாபனம் கட்டப்படாமல் முழுக்க முழுக்க ஜெபத்திலே கட்டப்பட்டு வந்துள்ளது. அவ்வப்போது என்னைத் தாங்கவும், அரவணைக்கவும் தேவன் நல்ல தேவமக்களை என் வாழ்க்கையில் கொண்டுவந்து என்னை மிகவும் ஆச்சரியமாக நடத்தி வந்துள்ளார்.

என் வாழ்க்கைப் பாதையை நான் திரும்பிப் பார்க்கும்போது அதிகமான வேளைகளில் தேவனை அறியாதவர்களும், தேவனுடைய ஊழியத்தை எதிர்க்கிறவர்களுமான மக்கள் மத்தியில்தான் தேவன் என்னைக் கொண்டு சென்று தமது திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார். ஏராளம் மக்கள் தங்கள் வாழ்க்கையில் நமது ஊழியம் மூலமாக இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்களையும், அடையாளங்களையும் பெற்று அனுபவித்துள்ளனர்.

குறிப்பாக பல இடங்களில் முழு நேர இரவு ஜெபங்களையும், பகுதி நேர இரவு ஜெபங்களையும் நடத்துவதால் ஏராளம் நன்மைகள் பலருக்குக் கிடைத்தன. எனவே இந்த ஜெப ஊழியத்தைத் தீவிரமாகச் செய்து வந்தேன். இந்த ஜெபங்களில் கொஞ்ச ஆட்கள் வந்தபோது அருகாமையிலுள்ள மக்களால் சகித்துக் கொள்ள முடிந்தது. ஆனால் ஜனங்கள் அதிகமாக வரவர இரவு ஜெபங்களின்போது அவர்களுடைய பாடல் மற்றும் ஏறெடுக்கப்படுகிற ஜெபம் கெம்பீரமாக இருந்ததால், பக்கங்களில் வாழ்ந்த மக்கள் இவற்றை இடையூறாகக் கருதினார்கள்.

எனவே, சொந்தமான இடம் இல்லாத காரணத்தினால் இந்த இரவு ஜெபங்களை எங்கள் அருகாமையில் உள்ள கடற்கரையில் நடத்த ஆரம்பித்தோம். ஒரு சில நாட்களுக்குள் அங்கேயும் ஏராளம் மக்கள் வர ஆரம்பித்ததால் ஜெபம் நடத்துவதில் பிரச்சினை ஏற்பட்டது. ஜெபத்திற்கு வருகிற மக்கள் பற்பல இன்னல்களிலிருந்து விடுதலை பெற்றதால் அந்த ஜெபத்தை நடத்தாமலும் இருக்க முடியவில்லை. இது எனக்கு மிகுந்த மன பாரத்தைக் கொடுத்தது.

இந்தப் பிரச்சினையை முறியடிக்க இன்னும் ஊக்கமான ஜெபம் மட்டுமே பலன் தரமுடியும் என்பதை உணர்ந்து என்னுடைய ஜெப நண்பர் ஒருவருடன் தினமும் இரவு 12.00 மணிவரை நெடுமுழங்கால்களில் நின்று இந்த விஷயத்தில் தேவன் தலையிடுமாறு வேண்டி ஜெபித்தேன். சில நாட்களுக்குள் சில பெரிய திருமண மண்டபங்களை வாடகைக்கு அமர்த்தி இரவு ஜெபங்களை நடத்த நல்ல சூழ்நிலைகளைக் கர்த்தர் கட்டளையிட்டார். இந்த ஊழியத்தை மிகுந்த பயபக்தியுடனும் அர்ப்பணிப்புடனும் நடத்த கர்த்தர் கிருபை செய்தார்.

இதன் விளைவாக, நாளடைவில் நமக்கு என்று ஒரு சொந்தக் கட்டிடத்தைக் கொடுத்து, யாருடைய தயவும் இல்லாதபடி நம் இரவு ஜெபங்களை நடத்திட தேவன் சகாயம் பண்ணியுள்ளார். தேவன் எவ்வளவு நல்லவர் பாருங்கள். ஆனால் இந்த வெற்றியை அடைந்திட பல ஆண்டுகள் ஆனதுடன், பொறுமையும், கடின உழைப்பும் தேவைப்பட்டன.

இந்த செய்தியை வாசிக்கிற அன்பரே, எல்லாக் காரியங்களையும் தேவன் அவசரமாகச் செய்வதில்லை. நம்முடைய மன உறுதியையும், ஊக்கமான ஜெப ஆவியையும் தேவன் எதிர்பார்க்கிறார். ஆகவே, ஏற்றக் காலத்திலே தேவன் உங்களை உயர்த்துவார். அதுவரை அவருடைய பலத்தக் கைக்குள் அடங்கியிருங்கள். ... **ஏற்றக்காலத்தில் தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.** 1பேதுரு 5:6.

*************

*********************************************************************************************

... 6-ம் பக்கத் தொடர்ச்சி

பலருக்கு அதிகரித்து வருகிறது. சமுதாய எதிர்பார்ப்புகளுக்கும், தனிமனிதப் போராட்டங்களுக்கும் உள்ள வேற்றுமை மித மிஞ்சிய உணர்வுகளுக்குள் நம்மை நடத்தக் கூடும். நமது இணைந்த ஆத்துமாக்களுக்கு பூரண சுகத்தையும் உயிர் மீட்சியையும் இயேசு கிறிஸ்து அளிக்கிறார்.

### தேவ சமூகத்தின் நிச்சயம்!

கவலை மிகுந்த வேளைகளில் அவரது சமூகத்தைத் தேட தேவன் நம்மை அழைக்கிறார். **“நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் ... தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்** சங்கீதம் 23:4) என்று தாவீது கூறினார். நமது போராட்டங்களில் நாம் தனிமையில் இல்லை யென்பதை தேவ பிரசன்னத்தின் நிச்சயம் உறுதியளிக்கிறது.

மேலும், **அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்து விடுங்கள்.** என்று 1 பேதுரு 5:7-ல் நமக்கு வாக்குப் பண்ணப்பட்டுள்ளது. சுமப்பதற்கு எந்தப் பாரமும் அவருக்குச் சுமையானவையல்ல. நமது கவலைகளை அவரிடம் ஒப்படைப்பதன் மூலம் மிகுந்த சமாதானத்தையும், விடுதலையையும் நாம் அனுபவிக்கிறோம்.

### இயேசு கிறிஸ்துவின் மூலம் சுகம்!

இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்கவும், துயரப்படுவோருக்கு ஆறுதலளிக்கவுமே இயேசு கிறிஸ்து வந்தார். விரக்தியின் நேரம் நாம் அவரிடம் ஆறுதலைப் பெற்றுக்கொள்ள இயலும். **கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என் மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார்; இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும்**

**கூறவும் ...** அவர் என்னை அனுப்பினார் என்று ஏசாயா அறிவித்தார். ஏசாயா 61:1.

ஆவி, ஆத்துமா, எண்ணங்களில் இந்த வாக்குத்தத்தம் சுகத்தையளிக்கிறது. இயேசு கிறிஸ்துவை நோக்கிப் பார்ப்பதினால், அவர் நமது வேதனையை அறிந்தவரா கையால், நாம் ஆறுதலைக் கண்டடை கிறோம். அவரது பாதத்தில் நமது பாரங்களை ஒப்படைத்து, உயிர் மீட்சியையும், நம்பிக்கை யையும் திரும்பப் பெற்றுக் கொள்ள, அவர் நம்மை அழைக்கிறார்.

## இயேசு கிறிஸ்துவே சமாதானத்தின் ஆதாரமான ஊற்று!

வாழ்க்கைச் சிக்கல்களை அலசுகின்ற நாம் இயேசு கிறிஸ்துவே சமாதானத்தின் முடிவான ஆதாரம் என்பதைக் கண்டறிய வேண்டும். குழப்பத்தில் அமைதியை மட்டுமல்ல, நித்திய நம்பிக்கையின் அஸ்திபாரத்தையும் அவர் நமக்கு அளிக்கிறார்.

## அன்றாட வாழ்வில் சமாதானம்!

இதனை அனுபவிக்க ஜெபம், வேத வாசிப்பு மற்றும் ஐக்கியம் ஆகியவற்றின் மூலம் நாம் இயேசு கிறிஸ்துவுடன் ஒரு உற வைக் காத்துக் கொள்ள வேண்டும். ஆகை யால்தான் **உண்மையுள்ளவைகளையும், ஒழுக்கமுள்ளவைகளையும், நீதியுள்ளவை களையும், கற்புள்ளவைகளையும், அன்புள்ள வைகளையும் மெச்சிக் கொள்ளத்தக்கவை களையும் சிந்திக்கும்படி** (பிலிப்பியர் 4:8). வேதம் நம்மை ஊக்கப்படுத்துகிறது. இவற்றை நமது சிந்தையில் ஏற்றுக் கொள்வதின் மூலம் நமது அன்றாட வாழ்க்கையில் நாம் தேவ சமாதானத்தை வரவேற்கிறோம்.

**சமாதானம் ஆவியின் கனியின் ஒரு பகுதியாகும்.** (கலாத்தியர் 5:22,23). நாம் ஆவியின்படி நடந்து தேவனுக்கு ஒப்புக் கொடுக்கும்போது, நமது அன்றாட நடக்கையிலும் தெரிந்தெடுப்புகளிலும், தேவ சமாதானத்தைக் காண இயலும். சமாதானத் தை ஒரு உணர்வாக மட்டும் கொள்ளாமல், நமது அன்பினாலும், மனதுருக்கத்தினாலும் நமது வாழ்க்கையின் ஒரு வழிமுறையாகவே பிறருக்கு வெளிப்படுத்த இயலும்.

## சமாதானத்தைப் பரிசளித்தல்!

மறுரூபமாக்கும் இயேசு கிறிஸ்து வின் சமாதானத்தை அனுபவிக்கும் நாம், அதனை உலகத்துடன் பகிர்ந்து கொள்ள அழைக்கப்பட்டுள்ளோம். பிரிவினையாலும், போராட்டத்தாலும் பாதிக்கப்பட்டுள்ள சமுதாயத்தில், நமது சாட்சியுள்ள வாழ்வு, இயேசு கிறிஸ்துவின் நம்பிக்கையாக அமையட்டும். இக்கிறிஸ்து பிறப்பு நாட்களில் நம்முடன் இணைந்து தேவ சமாதானத்தை அனுபவிக்க மற்றவர்களையும் அழைத்துக் கொள்வோமாக!

## இயேசு கிறிஸ்து பிறப்பின் உண்மையான உணர்வு!

கிறிஸ்மஸ் என்பது வெறுமனே ஒரு விடுமுறை நாள் அல்ல; அது சமாதானம், நம்பிக்கை, சுகம் போன்ற தெய்வீக செய்தியை அளிக்கிறது. இயேசு கிறிஸ்து பிறப்பைக் கொண்டாடும் நாம் அவருடனான உண்மையான உறவில்தான் சமாதானம் கிட்டுகிறது என்று நினைவில் கொள்ள வேண்டும். நமது பாவத்திலிருந்து விடுதலை; இயேசு கிறிஸ்து அளிக்கும் நம்பிக்கை, சமாதானம் பண்ண நமக்கு அளிக்கப் பட்டுள்ள அழைப்பு இப்பண்டிகைக் காலத்தின் முக்கியத்துவத்தை நமக்கு ஆழப்படுத்துகிறது.

குழப்பமும், பிரிவினைகளும் நிறைந்த உலகில் நம்பிக்கையின் ஒளியாக இயேசு கிறிஸ்து காணப்படுகிறார். கலக்கமுள்ள உலகிற்கு அவரது அன்பினால் தேவனுடைய உள்ளத்தை வெளிப்படுத்தி சமாதானத்தைப் பகிர்ந்து கொள்ளுவோம். தேவ சமாதானம் நம்மை மறுரூபமாக்குவதின் மூலம், மற்றவர்களுக்கும் அதை பகிர்ந்த ளித்து உண்மையான இயேசு கிறிஸ்து பிறப்பின் ஆவியையுடையவர்களா யிருப்போம்.

**தேவசமாதானம் உங்கள் இருதயங் களில் ஆளக்கடவது, இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள் ...** கொலோசெயர் 3:15. இப்பண்டிகை நாட்கள் இச்சமாதானத்திற்கு நம்மை நெருங்கச் செய்து, இயேசு கிறிஸ்துவுக்குள் மேற்கொண்டு, தேவையில் உள்ள உலகிற்குப் பகிர்ந்தளிக்க நம்மை பலப்படுத்துவராக!

* * * * * * *

### வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக "அழைப்பின் எதிரொலி" அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) "Echo of His Call Educational Trust" என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| **Account Name** | **: ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST** |
| **Account Number** | **: 1023 2923 805** |
| **Bank Name** | **: STATE BANK OF INDIA** |
| **Branch** | **: TRIPLICANE, CHENNAI - 600 005** |
| **IFSC Code** | **: SBIN 0000249** |
| **SWIFT Code** | **: SBI NIN BB 455** |

## அன்பான வாசகர்களின் கவனத்திற்கு . . .

### போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் சுயசரிதை

போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் சுயசரிதையை புத்தக வடிவில் முடிப்பதற்கான நிறைவுக் கட்டத்தில் இருக்கிறோம். **நமது போதகரின் ஊழியத்தின் மூலம் நீங்கள் பெற்ற நன்மைகளை 10 வரிகளில் சாட்சியாக எழுதி அனுப்பவும்.** கூடுதலாக தங்கள் புகைப்படத்தை அனுப்பினால் அதனை சுயசரிதை புத்தகத்தில் சேர்த்து வெளியிட உதவியாக இருக்கும்.

– ஆசிரியர்

RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/24-26 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/24-26

## அழைப்பின் எதிரொலி

**YouTube (யூடியூப்)**

உங்களுக்கு நேரம் கிடைக்கும் போது நமது அழைப்பின் எதிரொலி (ECHO OF HIS CALL) யூடியூப் (YouTube) சேனலைப் பார்த்து Subscribe செய்ய வேண்டுகிறோம். நன்றி!

– ஆசிரியர்

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

| | | |
|---|---|---|
| Branch | : | Triplicane, Chennai-5 |
| Name | : | S. Sam Selva Raj |
| A/C No. | : | 1023 2934 679 |
| IFSC | : | SBIN 00 00 249 |
| SWIFT CODE | : | SBI NIN BB 455 |

### *2. Bank : ICICI Bank*

| | | |
|---|---|---|
| Branch | : | Anna Salai, Chennai-6 |
| Name | : | Echo of His Call |
| A/C No. | : | 6038 0502 2319 |
| IFSC | : | ICIC 000 6038 |

### *3. Bank : State Bank of India*

**(This Account is for Tax Exemption for Indians only )**

| | | |
|---|---|---|
| Branch | : | Triplicane, Chennai-5 |
| Name | : | Echo of His Call Educational Trust |
| A/C No. | : | 1023 2923 805 |
| IFSC | : | SBIN 00 00 249 |

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**

*****

E.mail : sam@echoofhiscall.org

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

❋ வருட சந்தா ரூ. 100/– ❋ ஆயுள் சந்தா ரூ. 2000/–

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.


## அழைப்பின் எதிரொலி,

**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**

தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858

E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in

Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com


**YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO**


**Regd. with the RNI under No. 67380/93**
**Licenced to post without pre-payment**
**Postal Regn. No. TN/CH/(C)/197/24-26**
**Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2024-26**
**Date of Publication: last week of previous month**
**Date of Posting : 27th & 28th of previous month**
**Posted at "Egmore RMS / 1 Patrika Channel"**
**on 28th NOVEMBER 2024**
**If un-delivered please return to:**
**ECHO OF HIS CALL (TAMIL)**
**P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.**
**Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766**


*JESUS LOVES YOU!*

To

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at **Echo of His Call Printers,** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**